O.S. No: 87/2015

பெயர் : சுவாமிநாதன்

**பி.சா.1**

01-07-2025

**6 ஆம் பிரதிவாதி நீதிமன்ற அனுமதி பெற்று நேரடியாக குறுக்கு விசாரணை செய்கிறார்.**

நான் PUC வரை படித்திருக்கிறேன். எழுத, படிக்க தெரியுமா என்றால் சுமாராக தெரியும். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் இறுதியில் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறேன் என்றால் ஆமாம். நான் என்னுடைய தனிப்பட்ட சொத்தான அயிட்டம் நம்பர் 4, 50, 51, 52 ஆகியவற்றை வழக்கில் தவறுதலாக சேர்த்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். அந்த 4 சொத்துக்களை பாகப்பிரிவினைக்கு உட்படுத்த வேண்டாம் என்பது தான் என் வேண்டுகோள் என்றால் ஆமாம். வாதிகளும் அதை அவமோதிக்கும் வகையில் என்னை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் இந்த அயிட்டம் நம்பர் 4, 50, 51, 52 பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரி. வாதிகள் மூவர் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயார் பெயர் சுந்தராம்பாள். 3 ஆம் பிரதிவாதி கண்ணன் என்கின்ற சுந்தர்ராஜன் 3 மாத குழந்தையாக இருந்த போது சுந்தராம்பாள் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். அதன்பிறகு சுந்தராம்பாளின் தங்கை முறையான சந்திரா என்பவரை நாகராஜ படையாச்சி இரண்டாவதாக திருமணம் செய்துக்கொண்டார் என்றால் ஆமாம். அந்த திருமணத்தின் போது வாதிகள் மூவர் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் இளவராக இருந்தார்கள் என்றால் ஆமாம். சந்திராம்மாள் தனக்கு பிறந்த 5 குழந்தைகளுடன் மற்ற 6 குழந்தைகளையும் ஒன்றாக வளர்த்து 6 ஆம் பிரதிவாதியை தவிர மற்ற அனைவருக்கும் திருமணம் செய்து வைத்தார் என்றால் ஆமாம். 1962 முதல் 1972

வரை சொத்து வாங்கிய காலகட்டத்தில் நான் இளவராக இருந்தேன் என்றால் ஆமாம். நான் அலவந்தியபுரம் ஊராட்சி மன்ற தலைவராக 5 வருடங்கள் பணியாற்றினேன் என்றால் ஆமாம். நான் கள்ளு கடையை ஏலம் எடுத்து நடத்தி வந்தேன். நான் ராஜன் டிராவல்ஸ் என்ற பெயரில் பல கார்களை வைத்து டிராவல்ஸ் நடத்தி வந்தேன் என்றால் ஆமாம். ராஜன் மர மில் என் அப்பா ஆரம்பித்து , 2 ஆம் பிரதிவாதி சிவராம கிருஷ்ணன் நடத்தி வருகிறார். ராஜன் ரைஸ் மில் லைசன்ஸ் என் பெயரில் உள்ளது நான் தான் நடத்தி வருகிறேன். உயிலில் 30 வருடத்திற்கு மேலாக ரைஸ் மில்லை சிவக்குமார் தான் நடத்தி வருவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அந்த உயிலே தவறு. 4 ஆம் பிரதிவாதி பிளாஸ்டிக் கம்பெனி மற்றும் செல் போன் வினியோகம் செய்யும் கம்பெனி நடத்திவந்தார் என்றால் பங்குதாரராக நடத்தி வந்தார். 4 ஆம் பிரதிவாதியும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மாவட்ட கவுன்சிலராக 5 வருடங்கள் பணியாற்றினார் என்றால் ஆமாம். அவர் போதும் முக்கிய கட்சியின் ஒன்றிய செயலாராக இருந்து வருகிறார் என்றால் ஆமாம். 6 ஆம் பிரதிவாதி வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறார். இது குறித்து நான் என்னுடைய எதிர் வழக்குரையிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை. எந்த வருடம் முதல் அவர் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார் என்று ஞாபகமில்லை. அவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் பணியாற்றுகிறார். அவர் எந்த வருடம் முதல் அரசு சிறப்பு குற்ற வழக்கறிஞராக பணியாற்றிவருகிறார் என்று ஞாபகமில்லை. 1993 இல் இருந்து இப்போது வரை 6 ஆம் பிரதிவாதி சென்னையில் தான் இருந்து வருகிறார் என்றால் ஆமாம். நான் 6 ஆம் பிரதிவாதிக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை. 2005 இல் இருந்து இன்றைய தேதிவரை அலவந்தியபுரம் , சுவாமிமலை மற்றும் சென்னையில் பல்வேறு சொத்துக்களை 6 ஆம் பிரதிவாதி வாங்கிவந்தார் என்றால் ஆமாம். 7 ஆம் பிரதிவாதி சென்னையில் இன்டேன் கேஸ் ஏஜென்சி நடத்தி

வருகிறார் என்றால் ஆமாம் .  விவசாயத்தை தவிர பிரதிவாதகளுக்கு வேறு எந்த தொழிலும் இல்லை என்று சொல்லியிருப்பது பொய் என்றால் ஆமாம் . நாகராஜ படையாச்சி இரண்டு டெண்ட் கொட்டாய் நடத்தினார் . அலவந்தியபுரத்தில் சர்வே நம்பர் 158/ஏ, 158/3 ஏ அடங்கிய இடத்தில் நான் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் ஆமாம். நான் 1997 இல் தனி குடித்தனம் போனேன் . 2 ஆம் பிரதிவாதி சிவராம கிருஷ்ணனும் தனியாக வீடு கட்டி குடி போய் உள்ளார் என்றால் ஆமாம் . 3 ஆம் பிரதிவாதி கண்ணன் கும்பகோணம் பேட்டை தெருவில் வீடு கட்டி குடி போய் 5, 6 வருடங்களுக்கு மேல் இருக்கும். நான் குடியிருக்கும் வீடு உள்ள இடம் நாகராஜ படையாச்சி எனக்கு உயில் மூலம் கொடுத்தது . நாகராஜ படையாச்சிக்கு அசையும் சொத்துக்களும் உள்ளது என்றால் ஆமாம் . அந்த அசையும் சொத்துக்கள் எதுவும் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை . உயிலில் கண்ட படி 4 ஆம் பிரதிவாதி மகேந்திரன் அசையும் சொத்துக்களை எடுத்துக்கொண்டார் என்றால் ஆமாம் . தவறுதலாக 4 அயிட்ட சொத்துக்களை இந்த வழக்கில் சேர்த்ததாக நான் சொல்லியுள்ள சர்வே எண்கள், 134/3, 123/2, 122/1, 132/13 ஆகும். நான் சர்வே நம்பர் 123/2, 158/3 ஏ, 123/4, 134/4, 132/13, 132/14 ஆகிய சொத்துக்களை நான் என் மனைவி பெயரில் மாற்றிவிட்டேன் என்றால் ஆமாம் . எப்பொழுது அவ்வாறு மாற்றினேன என்றால் போன வருடம் 2024 இல் மாற்றினேன் . உயில் மூலமும் தனிப்பட்ட முறையில் கிடைத்த சொத்துக்களை மனைவி பெயரில் மாற்றிவிட்டு , தற்போது சொத்தை பிரித்து கொடுக்கள் என்று கேட்பது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி ராஜ லெட்சுமி மற்றும் அவர் குடும்பத்திற்கும் அலவந்திபுரத்தில் ஒரு 18 ஏக்கர் சொத்து இருக்கும் . 7 ஆம் பிரதிவாதி ஹெமலதாவிற்கு அலவந்திபுரத்தில் இதே அளவிற்கு 18 ஏக்கர் சொத்து இருக்கும் . வாதிகள் பெயரில் உள்ள சொத்துக்கள் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை

என்றால் ஒரு சொத்து மட்டும் சேர்த்திருக்கிறார். நாகராஜ படையாச்சி என் பெயரில் வாங்கிய மேலத்தெரு மூங்கில் கொல்லையை நான் விற்றுவிட்டேன் என்றால் அந்த சொத்து நான் தனிப்பட்ட முறையில் வாங்கியது . அந்த சொத்து பாகப்பிரிவினையில் காட்டப்படவில்லை . அந்த சொத்தை நான் 7 ஆம் பிரதிவாதியின் கணவருக்கு தான் விற்றேன் என்றால் ஆமாம். நாகராஜ படையாச்சி 2 ஆம் பிரதிவாதிக்கு வாங்கிக்கொடுத்த தேக்கு தோப்பை அவர் விற்றுவிட்டார் என்றால் அதை நாகராஜ படையாச்சி வாங்கிக்கொடுக்கவில்லை. தாய் வழி தாத்தா ரத்தின படையாச்சி வாங்கி கொடுத்தார் . அந்த சொத்து பாகப்பிரிவினையில் சேர்க்கப்பட்டுள்ளதா என்று ஞாபகமில்லை. சுவாமிமலை சன்னதி தெருவிலும் மேலத் தெருவிலும் உள்ள இடத்தை நான் வாங்கிய கடனுக்காக தான் நாகராஜ படையாச்சி விற்றார் என்றால் குடும்ப செலவிற்காக விற்றார் . அந்த சொத்தும் பாகப்பிரிவினை வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் ஆமாம் . என் மருமகன் பரணிகுமார் பெயரில் அலவந்திபுரத்தில் வாங்கப்பட்ட சொத்துக்கள் ஏதாவது இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை . திருவலஞ்சுழியில் உள்ள இடத்தை விற்பதற்கு நான் கையெழுத்து போட்டு கொடுத்தேனா என்றால் சாட்சியாக கையெழுத்து போட்டிருக்கிறேன் . அந்த ஒரு இடம் மட்டும் பாகப்பிரிவினை வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . நாகராஜ படையாச்சி எந்த உயிலும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்று தான் நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம் . ஆனால் நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரி . வா.சா.ஆ. 33 போலி என்று சொல்லியுள்ள நிலையில், அது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை . உயில் செல்லாது என்று 10 வருடமாக நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை .

உயிலின் அடிப்படையில் அனைவரும் பட்டா மாற்றி அனுபவித்து வருகிறார்கள் என்றால் ஆமாம் . நாகராஜ படையாச்சி உயில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த உயிலில் 3 பேர் சாட்சி கையெழுத்து போட்டிருக்கிறார்கள் என்றால் ஆமாம். அதில் ஒருவர் அலவந்திபுரத்தில் 30 வருடமாக போஸ்ட் மாஸ்டராக இருப்பவர் என்றால் ஆமாம் . மற்றொருவர் நாட்டாண்மையாகவும், முக்கிய கட்சி செயலாராகவும் இருக்கிறார் என்றால் ஆமாம். மற்றொருவர் பக்கிரிசாமி படையாச்சி பேரன் நமக்கு உறவினர் என்றால் ஆமாம். பத்திரத்தில் சார்பதிவாளரிடம் டெப்பாசிட் செய்வதற்கு சம்மந்தப்பட்ட நபர் மத்திய அலுவலகம் செல்ல வேண்டும் என்றால் தெரியாது. அந்த உயிலை நான் படித்து பார்க்கவில்லை. அந்த உயிலில் அனைத்து பக்கங்களிலும் அவர் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் அதில் கையெழுத்து இருந்தது. ஆனால அவருடைய கையெழுத்து அல்ல . இந்த கையெழுத்து போலியானது. தடய அறிவியல் துறைக்கு அனுப்ப வேண்டும் என்று நான் மனு செய்யவில்லை. உயிலை சார் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து படித்து பார்த்த போது, நான் சார்பதிவாளரிடம் ஆட்சேபனை எதுவும் தெரிவித்தேனா என்றால் இல்லை. உயில் எழுதி வைத்த பிறகு சுமார் 2.1/2 வருடம் கழித்து தான் நாகராஜ படையாச்சி இறந்தார் என்றால் ஆமாம் . அந்த உயிலில் என் சுய சம்பாத்தியத்தில் சாமிநாதன் பெயரில் சில இடங்களை வாங்கியுள்ளேன் . அவை அனைத்தும் அவரையும் சாரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் அவ்வாறு வாசகம் உள்ளது. அதில் ஏ செட்டியூல் மற்றும் அயிட்டம் 2 யை என் பெயருக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம் . அதில் சி-செட்டியூலில் உள்ள சொத்துக்கள் அனைத்தையும் என் பெயரில் எழுதியுள்ளார் என்றால் அவை அனைத்தும் நான் வாங்கிய சொத்துக்கள் . 6 ஆம் பிரதிவாதி அலவந்திபுரம் சுவாமிமலையில் வாங்கிய ஏதாவது சொத்தை விற்றுள்ளாரா

என்றால் தெரியாது. 2005 ஆம் வருடம் 6 ஆம் பிரதிவாதி பட்டம்மாளிடமிருந்து இரண்டு கிரையம் பெற்றுள்ளார். அது வாதி தரப்பில் வா.சா.ஆ. 19, வா.சா.ஆ. 20 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த சொத்துக்கள் பதிவு செய்யப்படாமல் பூர்வீமாக அனுபவத்தில் இருந்ததை தான் 6 ஆம் பிரதிவாதி தன் பெயரில் பதிவு செய்துள்ளார். சீத்தாராமனிடமிருந்து 6 ஆம் பிரதிவாதி நேரடியாக ஒரு சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் ஏற்கனவே கிரையம் வாங்கியிருந்த சொத்தை , பதிவு செய்யாமல் இருந்ததை தான் 6 ஆம் பிரதிவாதி தன் பெயரில் கிரையம் செய்துள்ளார். சீத்தாராமன் ஐய்யரிடம் நாகராஜ படையாச்சி கிரையம் வாங்கிய சொத்தை 2009 இல் 6 ஆம் பிரதிவாதி பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம். 1982 கிரைய ஒப்பந்தம் பற்றி 47 வருடங்கள் கழித்து தற்போது தான் நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் இந்த வழக்கிற்காக ஆவணங்களை தேடும் போது தான் கிடைத்தது. 6 ஆம் பிரதிவாதி பெயரில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணங்கள் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய கோரி நானோ, வாதிகளோ எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் ஆமாம். என்னுடைய 3 வது மகளுக்கு எப்போது திருமணம் ஆனது என்று நினைவில்லை. 10, 12 வருடங்கள் இருக்கும். அந்த திருமணத்தை முன்னின்று நடத்தியது நாகராஜ படையாச்சி என்றால் நான் தான் முன்னின்று நடத்தினேன். நாகராஜ படையாச்சி கலந்து கொண்டார். முதல் வாதியும், அவரது கணவர் பிரகாசமும் போலியாக அழகிரிசாமி, கண்ணம்மாள் பெயரில் தயாரித்த போலி கிரைய ஒப்பந்தத்தில் நான் சாட்சியாக கையெழுத்து போட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த கிரைய ஒப்பந்தம் போலியானது என்று இந்நீதிமன்றத்தில் தீர்ப்பாகியுள்ள விவரம் தெரியும். முதலாம் வாதி என் சம்மந்தி என்பதால் 4 ஆம் பிரதிவாதி மீது அவர் கொடுத்த பல்வேறு புகாருக்கு நான் துணையாக சென்றிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான்

வாதிக்கு பல சொத்துக்களை வாங்கி கொடுத்திருக்கிறேன் என்றால் ஆமாம் . 2011 இல் ஊராட்சி மன்ற தேர்தலில் குடும்பத்திற்கு எதிராக வாதி போட்டியிட்டவருக்கு ஆதரவாக செயல்பட்டதால் தான் தரப்பினர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல . எந்த ஒரு கிரைய ஆவணத்திலாவது நாகராஜ படையாச்சி பணம் கொடுத்து அதனடிப்படையில் கிரையம் வாங்கியதாக குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. எந்த ஒரு கிரைய ஆவணத்திலாவது பூர்வீக பொது குடும்ப வருமானத்தில் இருந்து இந்த சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரி . நடேச படையாச்சி தன் உயிலில் தன் மகன் நாகராஜன் தன் சொந்த முயிற்சியில் பல சொத்துக்கள் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆமாம் . அவ்வாறு குறிப்பிட்டுள்ள சொத்துக்களில் துளுக்கம் பள்ளமும் ஒன்று என்றால் ஆமாம் . நடேச படையாச்சி குறிப்பிட்டுள்ள அந்த சொத்துக்கள் கூட பூர்வீக சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 1950 லேயே நடேச படையாச்சிக்கும் அவருக்கு சகோரருக்கும் ஏற்பட்ட பாகப்பிரிவினை அடிப்படையில் பூர்வீக சொத்துக்கள் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதன் பிறகு நடேச படையாச்சி வாங்கிய சொத்துக்களை யார் பெயரிலும் வேண்டுமானாலும் அவர் எழுதி வைக்கலாம் என்றால் ஆமாம் . என்னுடைய 2 வது மகளை முதல் வாதியின் மகனுக்கு திருமணம் செய்து கொடுத்திருப்பதால் வேறு வழியின்றி வாதி தயார் செய்து கொடுத்த பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்து செய்து, அதற்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . நாகராஜ படையாச்சியின் உயிலை நன்கு தெரிந்தே தற்போது வழக்கிற்காக வேண்மென்றே அதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல . வா.சா.ஆ. 21 முதல் வா .சா.ஆ. 24 வரையிலான ஆவணங்கள் 6 ஆம் பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றால் பூர்வீக சொத்துக்களில் இருந்து முன்பணம் கொடுத்த

சொத்துக்களை தான் அவர் வாங்கியுள்ளார் . அவ்வாறு அந்த ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.